ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2121/32 - 2019 අප්‍රේල් මස 30 වැනි අඟහරුවාදා - 2019.04.30
2121/32 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

*கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.*

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், தொம்பே பிரதேச செயலாளர் பிரிவில், இல. 401/சீ, நாமலுவ தெகடன கிராம அலுவலர் பிரிவில், நாமலுவ தெகடன கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2018.06.19 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபட இலக்கம் GA/DOM/2018/147 இல் கீழ்க் காட்டப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் :

**01. துண்டு 'ஏ' - ஹல்கஹவத்தை - விஸ்தீரணம் : 0.0127 ஹெக்டயார்**

வடக்கு : இக்காணியின் மிகுதிப் பகுதி மற்றும் இலங்கை மின்சார சபை உரிமை கோரும் பெயர் குறிப்பிடப்படாத நிலம் ; கிழக்கு : இலங்கை மின்சார சபை உரிமை கோரும் பெயர் குறிப்பிடப்படாத நிலம் மற்றும் பீ. கே. தமரா பிரேமலதா உரிமை கோரும் பென்துருகும்புர என்று அழைக்கப்படும் நெல் வயல் ; தெற்கு : பீ. கே. தமரா பிரேமலதா உரிமை கோரும் பென்துருகும்புர என்று அழைக்கப்படும் நெல் வயல் மற்றும் வீதி (வீ. அ. அ.) ; மேற்கு : வீதி (வீ. அ. அ.) மற்றும் இக்காணியின் மிகுதிப் பகுதி.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது குறிப்பு இல. : 4-3/2/2018/CEB/10.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
'மிஹிகத மெதுர',
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2019, மாச்சு 16.

05 - 256

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

*கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.*

கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில், கோரளைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவில், பேதால 205B கிராம அலுவலர் பிரிவில், கருன்கலிசோலை எனும் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2018.08.02 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபட இலக்கம் BT/ KRP/2014/048 இல் துண்டு 'ஏ' எனக் காட்டப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் :

**01. துண்டு 'ஏ' - வெல்லயாடிபூவல் - விஸ்தீரணம் : 1.0117 ஹெக்டயார்**

வடக்கு : வாலச்சேன ஆறு மற்றும் என். வி. பீ. ஜோன்பிள்ளை உரிமை கோரும் வெல்லயாடிபூவல் வீட்டுத் தோட்டம் ; கிழக்கு : என். வி. பீ. ஜோன்பிள்ளை உரிமை கோரும் வெல்லயாடிபூவல் வீட்டுத் தோட்டம் ; தெற்கு : என். வி. பீ. ஜோன்பிள்ளை உரிமை கோரும் வெல்லயாடிபூவல் வீட்டுத் தோட்டம், வீதி (பிரதேச சபை), உரிமை கோருவோர் கண்டுபிடிக்க முடியாத வெல்லயாடிபூவல் வீட்டுத்தோட்டம் ; மேற்கு : வீதி (பிரதேச சபை), உரிமை கோருவோர் கண்டுபிடிக்க முடியாத வெல்லயாடிபூவல் வீட்டுத்தோட்டம் மற்றும் வாலச்சேன ஆறு.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது குறிப்பு இல. : 4-3/4/2017/D/520.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
'மிஹிகத மெதுர',
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2019, ஏப்பிறல் 01.

05 - 257